பக்கங்கள் நான்கு    விலை ரூபா: 4 : 50

# முரசொலி

முரசு 05 ஒலி 209 பிரசோற்பத்தி ஆனி 11 ( 25-06-1991 ) செவ்வாய்

# கடும் பொலிஸ் பாதுகாப்பு மத்தியில் ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவியேற்பு



தமிழ்நாட்டின் பதினொராவது முதலமைச்சராகவும், இரண்டாவது பெண் முதலமைச்சராகவும் நேற்று நண்பகல் செல்வி ஜெயலலிதா(44) பதவியேற்றார். சென்னை பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் இப்பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இவருடன் 18 உறுப்பினர் கொண்ட அமைச்சரவையும் பதவியேற்றது. தமிழக ஆளுநர் முன்பாகப் புதிய அமைச்சரவை பதவிப் பிரமாணம் செய்து கொண்டது. பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள காங்கிரஸ் பிரமுகர்கள் அ. தி. மு. க. தொண்டர்களும் வந்திருந்தனர். மெரீனா கடற்கரை வீதியும் அ. தி. மு. க. ஆதரவாளர்களினால் நிரம்பியிருந்தது. நேற்றைய பதவியேற்பு நிகழ்ச்சி கடும் பாதுகாப்பு மத்தியிலேயே இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. மண்டபத்தின் உள்ளேயும் வெளியேயும் பொலிஸாரின் ஹெல்மெட்டுகளே பரவலாகத் தெரிந்தன என செய்தியாளர்கள் தெரிவித்தனர். மண்டபத்தினுள் சென்ற பிரமுகர்கள் உட்பட அனைவருமே தனித்தனியாக சோதனையிடப்பட்ட பின்னரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். நேற்று புதிதாகப் பதவியேற்ற அமைச்சர்களில் சிலர் எம். ஜி. ஆர் ஆட்சிக்காலத்தில் அமைச்சரவையில் இடம்பெற்வர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முதலமைச்சர் ஜெயலலிதாவே பாதுகாப்புக்குப் பொறுப்பாகவிருப்பார். இரா. நெடுஞ்செழியன் நிதியமைச்சராகவும், எ[illegible]. டி. சோமசுந்தரம் வருவாய்த்துறையமைச்சராகவும், வீரப்பன் கல்வியமைச்சராகவும், அரங்கநாயகம் தொழிலாளர் நல அமைச்சசராகவும் பதவியேற்ற முன்னாள் அமைச்சர்களாவர். புதிய முதலமைச்சர் ஜெய — 4 ஆம் பக்கம் பார்க்க

# திகில் நிறைந்த நகரமாக கொழும்பு மாறி வருகிறது

## பி. பி. ஸி. செய்தியாளர்கள் விமர்சனம்

கொழும்பில் மூன்று மாதத்திற்குள் இரு தடவைகள் நடைபெற்ற வெடிகுண்டு தாக்குதல்கள் தலைநகரைத் திகில் கொண்ட ஒரு நகராக மாற்றியுள்ளதாக பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இப்படியான தாக்குதல்கள் தொடர்ந்து தலைநகரில் இடம்பெறலாம் என்ற அச்சம் பொதுமக்களிடையேயும், பாதுகாப்புப்படையினரிடையேயும் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கில் ஏற்பட்ட சூழ்நிலை இப்போது கொழும்பு மாநகரில் வந்துள்ளதாகவும் அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தாக்குதல் நடைபெற்றதையடுத்து நகரின் சன நெரிசல்மிக்க பகுதிகளில் பாதுகாப்புப்படை அலுவலகங்களைத் தொடர்ந்தும் வைத்திருக்க அதிகாரிகள் விரும்பவில்லை எனவும், — 04 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

மணலாறு மாவட்டம் மண்கிண்டி பகுதி இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை நடந்த மோதலில் சோழன் (த இராஜஇராஜன் கோப்பாய்) வீரமரணமடைந்தார்.

## ஊரடங்கு நீக்கம்

மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை முதல் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கப்பலில் தபால்கள் வரும்

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு நேற்றுப் புறப்பட்ட கப்பலில் யாழ் குடாநாட்டுக்கான 299 தபாற் பொதிகள் அனுப்பப்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (33)

## வல்வெட்டித்துறை நோக்கி இரு பகுதி ஷெல் வீச்சு

வல்வெட்டித்துறைப் பகுதியை நோக்கி நேற்று முன்தினம் இரவு கடற்படையினரும், இராணுவத்தினரும் ஷெல் தாக்குதல்களை நடாத்தினர்.

வல்வைக் கடலில் ரோந்து புரியும் கடற்படைப் படகில் இருந்தும், பலாலி இராணுவ முகாமிலிருந்தும் நேற்று முன்தினம் இரவு 10 30 முதல் — 04 ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவில் சடலம் ஒதுங்கியது

மண்டைதீவு தெற்குக் கடற்பகுதியில் இனந்தெரியாத ஆணின் சடலமொன்று நேற்றுக் காலை கரை ஒதுங்கியுள் — 04 ஆம் பக்கம் பார்க்க

## பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ் நகரில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று திரண்டு மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

வவுனியாவில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர் ஜெயசீலனை விடுவிக்கக் கோரியும் தமிழ் மக்கள் படையினரால் தொடர்ந்து இனப்படுகொலைகளுக்குள்ளாகுவ — 04 ஆம் பக்கம் பார்க்க

## வீமன்காமம் படையினர் பலத்த ஷெல் தாக்குதல்

வீமன்காமம் டச்சு வீதி இராணுவத்தினர் நேற்று முன்தினம் அதிகாலை வீமன்காமம் பகுதி நோக்கி கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

அதிகாலை 1.30 மணிமுதல் இருமணி நேரமாக படையினர் ஷெல் தாக்குதல் நடாத்தினர். ஐம்பது ஷெல்கள் வீமன்காமம் பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

முகாமில் இருந்து படையினர் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சரத்பவார் பிரதமரினால் பழிவாங்கப்பட்டாரா?

பிரதமர் பதவிக்கு போட்டியிட்ட சரத்பவார் தனது மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

நாளை இவர் மத்திய அமைச்சரவையில் சேரலாம் இவர் பாதுகாப்பு அல்லது தொழிலமைச்சை ஏற்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக சரத்பவார் பிரதமருக்கு அடுத்தபடியான அமைச்சான உள்விவகார அமைச்சை பெறலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் பிரதமர் நரசிம்ம — 04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார்தீவில் இராணுவம் பல பகுதிகளில் குவிப்பு

மன்னார்த்தீவில் கடந்த 19 ஆம் திகதி முதல் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

தீவின் பல்வேறு பகுதிகளிலும் இவர்கள் நிலைகொண்டுள்ளனர்.

ஏற்கனவே படையினர் தாராபுரம் எருக்கலம்பிட்டி, தாழ்வுப்பாடு, 5 ஆம் கட்டை, மன்னார்நகர், பேசாலை ஆகிய ஐந்து பகுதிகளில் படையினர் உள்ளது தெரிந்ததே.

### முதலமைச்சர் ஜெயலலிதா

## தமிழக எதிர்க்கட்சிகள் பத்திரிகைகள்தான்

தமிழகத்தில் இப்போது எதிர்க்கட்சி இல்லை. இந்நிலையில் பத்திரிகைகளே எதிர்க்கட்சிகளாகச் செயற்படவேண்டும்.

இவ்வாறு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்றிரவு வானொலி, தொலைக்காட்சியில் உரையாற்றியபோது குறிப்பிட்டார்.

எமது நிறைகளை மட்டுமல்ல குறைகளையும் பத்திரிகைகள் சுட்டிக்காட்டி எமக்கு எதிர்க்கட்சியாகச் செயற்பட வேண்டும்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

### சி. பி. ஐ. கூறுகிறது

## கொலைச் சந்தேக நபர்கள் ஜேர்மனிக்குச் சென்று விட்டனர்

ராஜீவ்காந்தியின் கொலை தொடர்பாகத் தமிழகத்தில் தேடப்பட்டுவந்த ஆண் ஒருவரும் யுவதியும் தமிழகத்தில் இருந்து தப்பிச் சென்றுவிட்டதாக இந்தியப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்கள் ஜேர்மனிக்குச் சென்றிருக்கலாம் எனவும், இவ்வளவு கடும் பாதுகாப்பு — 04 ஆம் பக்கம் பார்க்க

### சேமிப்புப் பணத்தை

## வடபகுதி ஆசிரியர்கள் மீளப்பெற முடியாத நிலை

கல்வித்திணைக்கள கூட்டுறவுச் சிக்கன சேமிப்புச் சங்கத்தில் உள்ள சில வடபகுதி ஆசிரியர்களுக்கு அவர்கள் ஓய்வுபெற்ற பின்பு அவர்களுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவு வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆசிரியர்கள் ஓய்வு பெறும் மட்டும் மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை சேமிப்பாக இச்சங்கத்திற்கு தமது சம்பளத் -- 04 ஆம் பக்கம் பார்க்க

## பத்துக் கிராமங்களில் சுயதொழில் ஊக்குவிப்பு

அறவழிப் போராட்டக் குழுவின் கிராமிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இக்குழு பத்துக் கிராமங்களில் சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தவுள்ளது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பிறமொழி நீக்கித் தமிழில் எழுதுவோம்

| உருது | | தமிழ் |
|---|---|---|
| அமுல் | — | நடைமுறை |
| இலாக்கா | — | துறை |
| காகிதம் | — | தாள் |
| சிபாரிசு | — | பரிந்துரை |
| தபால் | — | அஞ்சல் |
| தஸ்தாவேஜ் | — | ஆவணம் |
| பந்தோபஸ்து | — | பாதுகாவல் |
| புகார் | — | குறைகூறல் |
| மனு | — | விண்ணப்பம் |
| மைதானம் | — | திறந்தவெளி |

(வளரும்)

## மூழ்கடிக்கப்பட்ட படகிலிருந்தவர்
## 9 மைல் நீந்திக் கரை சேர்ந்தார்

நெடுந்தீவுக்கும் நயினாதீவுக்கும் இடையில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டிருந்தபோது 21ஆம்திகதிஇரவு கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாகி மூழ்கடிக்கப்பட்ட மீன்பிடிப்படகில் இருந்த மூன்றாவது நபரான குருநகரைச் சேர்ந்த மீனவர் மத்தியாஸ் பிடெலிஸ் (32) கடந்த 23 ஆம் திகதி நீந்திக் கரை சேர்ந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக இவர் முரசொலிக்கு வழங்கிய பேட்டியில் தானும் இன்னும் மூவரும் சேர்ந்து நெடுந்தீவுக்கும் நயினாதீவுக்கும் இடையில் கடந்த 21 ஆம் திகதி இரவு மீன்பிடித் தொழிலை மேற்கொண்டிருந்தாகவும் இரவு 7.30 மணியளவில் திடீரென அங்குவந்த கடற்படையினரின் விரைவுப் படகில் இருந்து தம்மைநோக்கி துவக்குச்சூடும் 50 கலிபர்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதனால் தாங்கள் நால்வரும் கடலிம் பாய்ந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தம்முடன் நீந்தத் தொடங்கிய ஏனைய மூவரும் வெவ்வேறு திசையில் நீந்தியதாகவும் ராஜன் என்பவர் 29) நீந்தி நெடுந்தீவுக்கரையைச் சென்றடைந்துள்ளதாகவும், பண்டா(24)என்பவர் ஏற்கனவே குருநகர் வந்தடைந்ததாகவும், பவி(31 என்பவருக்கு என்னநடந்ததுஎன்றுதமக்குத் தெரியாது என்றும், அவருக்கு நீந்தத் தெரியாது என்றும் தெரிவித்தார்.

இரவு7.30 மணியளவில் இருந்து தான் நீந்தத்தொடங்கியதாகவும் நயினார்தீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடைப்பட்ட சுமார் 9 மைல் தூரத்தை நீந்தி 22 ஆம் திகதி அதிகாலை 4.30 மணியளவில் நயினாதீவைச் சென்றடைந்ததாகவும் அங்கு தன்னை ஒருவர் காப்பாற்றி உதவி செய்ததாகவும் பின்னர் மீண்டும் நீந்திக் குறிகாட்டுவான் இறங்கு துறைக்கு வந்தடைந்ததாகவும் மத்தியாஸ்பிடேலின் தனது அனுபவத்தைத் தெரிவித்தார். • (78)

## ★ அரசியல் பிரச்சினையை இயற்கை தீர்த்து வைத்தது
## பிலிப்பைன்ஸிலிருந்து அமெரிக்க இராணுவத்தை
# வெடித்த எரிமலை நாடுகடத்தியது!

**பிலிப்பைன்ஸில் உள்ள தனது இராணுவத் தளத்தை மூடிவிட அமெரிக்கா உத்தேசித்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.**

கிளாஸ் பேஸ் என்னும் நகரத்தில் அமைந்துள்ள இந்த இராணுவதள விவகாரத்தால் அமெரிக்கப் பிலிப்பைன்ஸ் உறவுகளில் சமீபகாலத்தில் பெரும் விரிசல் ஏற்பட்டிருந்தமை முரசொலி வாசகர்கள் அறிந்ததே

இந்தத் தளத்திற்கான குத்தகைக் காலம் முடிவடைகின்ற போதிலும் பிலிப்பைன்ஸில் இருந்துவெளியேறஅமெரிக்கா முன்னர் மறுத்து வந்தது.

ஆனால் இவ்விவகாரத்தைக் குறித்த கிளாஸ் பேஸ் நகருக்கு 15 கிலோ மீற்றர் தூரத்தில் சமீபத்தில் வெடித்த எரிமலை இலகுவாகத் தீர்த்து வைத்துள்ளது.

இந்த எரிமலை வெடிப்பினால் கிளாஸ் பேஸ் நகரில் இருந்த கட்டிடங்கள் முழுமையாக நிர்மூலமாக்கப்பட்டு அந்த நகரமே சீர்குலைந்து விட்டது.

அங்கிருந்த அமெரிக்கத்தளமும் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டதால் 15 ஆயிரம் அமெரிக்கத் துருப்புக்களும் அவர்களது குடும்பத்தினரும் அமெரிக்காவுக்கு தற்போது திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தளம் அமைந்துள்ள பகுதி நிர்மூலமாகி விட்டதாலும் எரிமலை வெடிக்கும் அபாயம் தொடர்ந்தும் உள்ளதனாலும் அங்கு மீண்டும் தளமமமைக்கும் முயற்சியை அமெரிக்கா தற்போது கைவிட்டு விட்டது.

இதனால் வருடாந்தக் குத்தகைப்பணமாக 720 கோடி ரூபாவை பிலிப்பைன்ஸ் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ள போதிலும், அது எதிர் நோக்கிய பெரும் பிரச்சினை இலகுவில் தீர்க்கப்பட்டு விட்டதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சிநீக்கம்
## புதிய அமைச்சரவை பதவியேற்பு

தமிழ் நாட்டில் அமுலில் இருந்த ஜனாதிபதி ஆட்சி நீக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் கூட்டிய முதல் மந்திரி சபைக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

அ. தி. மு. க. அமைச்சரவை பதவி ஏற்பதற்கு ஏதுவாகவே அங்கு ஜனதிபதி ஆட்சி நீக்கப்பட்டது.

இதே வேளை புதிதாகப் பதவி யேற்றுள்ள செல்வி ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவையில் 18 அமைச்சர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இப் புதிய அமைச்சர்களில் நெடுஞ்செழியன், கே. இராமசாமி, எஸ். பி.சோமசுந்தரம், கே. இராஜாராம், கே. அரங்கநாயகம் எஸ் முத்துச்சாமி, ஆர். எம். வீரப்பன் ஆகிய ஏழு முத்த உறுப்பினர்களும் அடங்குகின்றனர்.

## ஜே. வி. பி. நடவடிக்கையால்
## 800 கோடி ரூபா சொத்துக்கள் சேதம்

ஜே. வி. பி. நடவடிக்கைகளினால் தெற்கில் 800 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு சேதமேற்பட்டுள்ளது; 6000 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

கம்புறுபிட்டியில் இடம் பெற்ற கம்முதாவ விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி பிரேமதாஸா இதனைத் தெரிவித்தார்.

வெளிநாட்டுச் சக்திகள் திணிக்கும் யோசனையை நான் ஏற்கமாட்டேன், வெளிநாட்டுத் துருப்புக்களும் இங்கு இனித் தேவையில்லை எனவும் ஜனாதிபதி அங்கு தெரிவித்தார்.

## பௌர்ணமி நிகழ்ச்சி

நல்லூர் ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலயத்தில் மாதந்தோறும் நடைபெறும் பௌர்ணமி அரங்கிசையில் 26ஆம் திகதி புதன் கிழமை மாலை 6.30 மணிக்கு அளவையூர் சங்கீத வித்துவான் ஆசிரியர் எஸ் சிவஞானராசா அவர்களின் இன்னிசைக்கச்சேரி பக்கவார்த்திய சகிதம் நடைபெறவுள்ளது

## மெய்வல்லுநர் போட்டி

பண்டத்தரிப்பு சாந்தை சிற்றம்பலம் வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி கடந்த வெள்ளிக்கிழமையன்று அதிபர் சி குணரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

## வலி வடக்கு அவலம் பற்றி
## ஓய்வூதியர் சங்கம் மகஜர்

வலி-வடக்கு ஓய்வூதியர் சங்கம் வலி-வடக்கு அவலங்கள்பற்றி யாழ் அரச அதிபருக்கு மகஜர் அனுப்பியுள்ளது. அந்த மகஜரில் கடந்த ஆண்டு ஆனி மாதத்துக்குப் பின்னர் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மக்களின் அல்லல்கள் குறிப்பிடப்பட்டதுடன் நான்கு கோரிக்கைகளும் முன் வைக்கப்பட்டுள்ளன.

உலர் நிவாரணம் வாரம் தோறும் வழங்கப்பட வேண்டும் என்பதும். அ, இ, உ அட்டை என்ற பாகுபாடு இன்றி எல்லோருக்கும் 'இ' அட்டை வழங்கப்பட வேண்டும் என்பதும், ஓய்வூதியம் பெறுவோருக்குக் காலதாமதமின்றி ஓய்வூதியப் பணமாக வழங்கப்பட வேண்டும் என்பதும், 1-1 91 இல் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வுபெற்றவர்களுக்கு இடைக்கால ஓய்வூதியம் வழங்கடபடவேண்டும் என்பதும் அக்கோரிக்கைகளில் முக்கிய அம்சங்கள்.

## கம்பன்கழக ஜெயராஜ்
## பொன்னாடைபோர்த்திக்கௌரவிப்பு



கம்பன்கழகம் அமைப்பாளர் இ.ஜெயராஜ் கோண்டாவில் கிழக்கு அரசடி விநாயகர் ஆலய பரிபாலகர் சபையினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி ஆலய முன்றலில் 'சகிப்புத்தன்மையில் சாதனை செய்வதில் முன் நின்றவர் மெய்ப்பொருள் நாயனாரா? இயற்பகை நாயனாரா?' என்ற தலைப்பில் இ.ஜெயராஜ் தலைமையில் ஒரு பட்டி மன்றம் இடம்பெற்றது. அத்துடன் உற்சவ காலத்தில் 10 நாட்கள் தொடர் சொற்பொழிவுகளையும் இவர் அங்கு ஆற்றியிருந்தார்.

திரு.ஜெயராஜ் 1980 ஆம் ஆண்டு வைகாசி மாதம் தனது நண்பர்களுடன் இணைந்து 'அகில இலங்கைக் கம்பன் கழகத்தை' உருவாக்கியிருந்தார்.

1981 ஆம் ஆண்டு தைமாதம் தமிழ் நாட்டில் மதுரை மாநகரில் நடைபெற்ற 5 ஆவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற் திடீர்ப் பேச்சாளராகக் கலந்து கொண்டு இ. ஜெயராஜ் உரையாற்றுகையில் அப்போதைய தமிழக முதல்வர் எம். ஜி ஆரும், கலைஞரும் மீண்டும் ஒன்றுபட்டுப்பழைய நட்புறவோடு திகழ வேண்டுமென இராமாயணத்தை ஆதாரமாக வைத்து மிகச் சுவையாகப் பேசி எம்.ஜி.ஆரையே கைதட்டி ரஸிக்க வைத்து அங்கு திரண்டிருந்த லட்சக்கணக்கான தமிழக ரஸிகர்களையும் கவர்ந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## நிதம் சூட்ட அருள் அம்மா

அந்தமிலாப் பெருமைகளை அறிந்தேன் அம்மா
அகம் குளிர உருகி உளம் களித்தே நின்றேன்
பங்கமிலாப் பெருவாழ்வு பெறவே வேண்டி
பக்தியுடன் உனைத் தினமும் தொழுதேன் அம்மா
தங்குதடை ஏதுமின்றி அருளைத் தந்து
தல நயினை யுறை நாகேஸ்வரியே தாயே
செங்கமலப் பொற்பாதம் சிரமேற் கொண்டே
செழு மலர்கள் நிதம் சூட்ட அருள் நாகம்மா

(இன்று நயினை நாகபூஷணி அம்மை தேர்த்திருவிழா)

— நயினை இ. இருபானந்தா


## கேள்வி விண்ணப்பம் கோரல்

யாழ் பல்கலைக்கழகம் இலங்கை

யாழ்அரசினர் போதனா வைத்தியசாலை/ மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் போதனா வைத்திய சாலை ஆகியவற்றால் யாழ் பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்படும் உரிமை கோரப்படாத பிரேதங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு எடுத்துச் செல்வதற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து பிரேதக் கழிவு உறுப்புக்களை அகற்றுவதற்கும், அழிப்பதற்கும் தகுதி உடையவர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைகள் யூலை மாதம் 12 ஆம் திகதி 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக நிதியாளர் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் திறக்கப்படும்நேரம்யூலை மாதம் 12ஆம்திகதி மு.ப. 11.00 மணி. கேள்வி விண்ணப்பங்கள் அனுப்பப்படுய்காகித உறையின் இடதுபக்கமேல்மூலையில் யூஜே/எவ்/எஸ் 2/10/91 என்ற இலக்கம் குறிப்பிடல் வேண்டும்.

கூறுவிலைகள் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

1. யாழ் அரசினர் போதனா வைத்தியசாலையில் இருந்து திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு உரிமை கோரப்படாத பிரேதம்ஒன்றை எடுத்துச் செல்வதற்கான கட்டணம்
2. மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் போதனா வைத்திய சாலையில் இருந்துதிருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு உரிமைகோரப்படாத பிரேதம் ஒன்றைஎடுத்துச் செல்வதற்கான கட்டணம்.
3. திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில்இருந்து பிரேத உறுப்புக்களை அகற்றுவதற்கும் அழிப்பதற்கும் பொதி ஒன்றுக்கான கட்டணம்.

பதிவாளர்
யாழ்பல்கலைக்கழகம்
06087

# இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பாரிஸ் மகாநாடு ஒத்திவைப்பு!

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இக்கூட்டம் பாரிஸில் அக்டோபர் மாதம் நடைபெறவிருந்தது. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டமை உலக நாடுகளின் உதவியை எதிர்பார்த்திருக்கும் இலங்கையை பெரிதும் பாதித்துள்ளதாக பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களே இந்த உதவி வழங்கல் பாதிக்கப்பட்டமைக்கு காரணமெனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அரசு அதனை மறுத்துள்ளது.

## படைமுகாம்களுக்கு அருகிலுள்ள வீதிகள் மூடப்பட்டன!

கூட்டுப்படைத் தலைமயகக் குண்டுவெடிப்பையடுத்து வீதிகள் போக்குவரத்திற்கு மூடப்பட்டுள்ளன.

பாதுகாப்புத் துறையுடன் சம்பந்தப்பட்ட முக்கிய அலுவலகங்கள், தளங்கள் அமைந்துள்ள பகுதிக்கு அருகிலுள்ள வீதிகளே வாகனப் போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளன.

அத்துடன் முக்கிய தளங்களுக்கு அருகில் குடியிருப்பவர்கள் அப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மட்டுவிலில் விழா

உ மட்டுவில் தெற்கு அமெக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயப் பெற்றோர் தின விழா நாளை புதன் கிழமை மாலை நடைபெற விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கோட்டக்கல்விப்பணிப்பாளர் இ சிவானந்தன் பிரதமவிருந்தினராகக் ; கலந்துகொள்வர்.

## ஊடரங்கு தளர்த்தப்பட்டது; போக்குவரத்துக்கு மீண்டும் அனுமதி

வவுனியாவில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதாக நேற்று வெளியான கொழும்புப் பத்திரிகையொன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதையடுத்து அங்கு ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதாகவும் வவுனியாவிலிருந்து வடபகுதிக்கான போக்குவரத்துக்கள் மீண்டும் ஆரம்பித்துள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## பொருள்களை எடுத்துவர முன் அனுமதி தேவை

தீவுப்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்குப் பொருள்களை எடுத்துச் செல்வதாயின், அப் பொருள்கள் தமக்குச் சொந்தமானதெனச் சரியான ஆதாரங்களைக் காட்டி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தீவகப் பிரிவுக் காரியாலயத்தில் அனுமதி பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்கள் இல்லாத வீடுகளில் பொருள்கள் களவாடப்பட்டு வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாகப் பலர் செய்த முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப -12)

## மண்டைதீவு கடற் பகுதிகளில் கண்ணாத்தாவரம் வெட்ட தடை

மண்டைதீவு, அல்லைப்பிட்டிக் கடற்பகுதிகளில் கண்ணாத் தாவரங்களை வெட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் மண்டைத்தீவு பிரதேசப் பொறுப்பாளர் விசு அறிவித்துள்ளார்.

இக்கண்ணாத் தாவரங்களை உள்ளடக்கிய பகுதி பறவைகள் சரணாலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளமையாலும் மண்ணரிப்பைத் தடுத்து நிலப்பிரதேசங்களைப் பாதுகாப்பதற்காகவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ப-12)

## புதியதீவுகள் உருவாக வழிவகுக்கும் எரிமலைகள்

சமீபத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள எரிமலை வெடித்தது அனைவரும் அறிந்ததே.

எரிமலைகள் தரையில் இருப்பது போல் கடலிலும் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அவர்களின் மதிப்பீட்டின் படி கடலுக்கு அடியில் குறைந்தது 10 ஆயிரம் எரிமலைகள் இருக்கின்றன.

கடலின் அடியில் உள்ள எரிமலை வெடித்தவுடன் குழம்பு கடல் மட்டத்திற்கு மேலே தள்ளப்படுகிறது அதனால் கடலில் புதிய தீவுகள் உண்டாவதும் உண்டு, என்று புவியியல் ஆராச்சியாளர்கள் கூறுகின்றனர்.

அண்மையில் அத்திலாந்திக் சமுத்திரத்தில் புதிய தீவு ஒன்று இவ்வாறு உருவானதை பல நாட்டு விஞ்ஞானிகள் பார்த்து படங்களும் பிடித்துள்ளனர்.

ஐஸ்லாந்துக்கு அருகில் 1963 இல் சேரட்ஸி என்று இப்போது அழைக்கப்படும் தீவு இப்படித்தான் உருவானது என்று கூறப்படுகிறது.

கரியியன் கடலின் அடிமட்டத்தில் உள்ள கிரிகெம, ஜென்னி என்ற எரிமலை 20 ஆயிரமாவது ஆண்டிற்கு முன்னர் தீவாக மலரும் சாத்தியக் கூறுகள் தென்படுவதாகவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர், (16)

## பாடசாலைகள் பற்றிய விவரங்களை கல்விஅமைச்சு திரட்டுகின்றது

நாட்டில்இயங்கும் பாடசாலைகள் பற்றியபூரண விவரங்களை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக கல்வி அமைச்சு திரட்டிவருகின்றது

இது தொடர்பாக கல்வி அமைச்சில் இருந்து கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அனுபிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தற்போது கோட்டக்கல்வி அலுவலகங்களுக்குக் கீழ் இயங்கும் பாடசாலைகளை அரச பாடசாலைகள், தோட்டப் பாடசாலைகள், பிரிவெனா பாடசாலைகள், அரச நன்கொடை பெற்று இயங்கும் தனியார்பாடசாலைகள், அரசநன்கொடை பெறாமல் இயங்கும் தனியார் பாடசாலைகள் எனப் பிரித்து அவை பற்றிய விவரங்களை அத்துடன் அனுப்புமாறு பணிக்கப்பட்டுள்ளது ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு 5 வரையுள்ள பாடசாலைகள், ஆண்டு ஒன்று தொடக்கம் 8 வரையுள்ள பாடசாலைகள், ஆண்டு ஒன்று தொடக்கம் 11 வரையுள்ள பாடசாலைகள், ஆண்டு ஒன்று தொடக்கம் 13 வரையுள்ள பாடசாலைகள், ஆண்டு6 தொடக்கம் 13 வரையுள்ள பாடசாலைகள் எனத்தனித்தனியே விவரங்களைப்பிரித்துஅனுப்பி வைக்குமாறும்கல்விஅமைச்சுப் பணித்துள்ளது. 78

## சாவகச்சேரியில் ஹெலியின்பாகங்கள்

விடுதலைப் புலிகளினால் வவுனியா காட்டுப் பகுதியில் சுட்டுவீழ்த்தப்பட்ட பெல்ஜியம் தயாரிப்பான ஸ்ரீலங்கா விமானப்படை ஹெலிகொப்டரின் சிதைவுகள் நேற்றுக் காலை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

இந்த ஹெலியின் பாகங்கள் விடுதலைப்புலிகளினால் வவுனியா காட்டுப்பகுதியிலிருந்து மீட்கப்பட்டமை வாசகர்கள் அறிந்ததே.

கடும்பச்சை நிறமுடைய ஹெலியின் பாகங்களை மக்கள் முண்டியடித்துக்கொண்டு பார்வையிட்டனர்.

# செய்தி உலகம்

## ரக்ஸி ஓட்டும் டாக்டர்கள்

கனடாவில் குடியேறிய இந்திய டாக்டர்கள், கனடிய அரசினால் லைசென்ஸ் வழங்கப்படாததால் வைத்தியத் தொழில் பார்க்க முடியாது திண்டாடுகிறார்களாம்;

இந்த டாக்டர்கள் கனடாவில் வாடகைக் கார் சாரதிகளாகவும் பெற்றோல் பம்பர்களாகவும் மற்றும் சிறு தொட்டாட்டு வேலைகளையும் செய்து வருகிறார்கள்.

இந்த அவல நிலையைக் கண்டித்து இரு இந்திய டாக்டர்கள் அங்கு உண்ணாவிரதம் இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## எலும்புகள் ஒப்படைக்கப்படும்

40 ஆண்டுகளுக்கு முன் கொரியப் போரில் கொல்லப்பட்ட அமெரிக்கப் போர்வீரர்களின் எலும்பு போன்ற உடலின் எஞ்சிய பகுதிகளை அமெரிக்காவிடம் கையளிக்க வடகொரியா தற்போது முன் வந்துள்ளது.

1950 - 53 காலப்பகுதியில் இடம் பெற்ற இப் போரில் கொல்லப்பட்ட 1000 கணக்கான அமெரிக்கப் படையினரின் உடல்களைத் திருப்பி ஒப்படைக்கக் கொரியா மறுத்ததினால் இரு நாடுகளுக்குமிடையேயான உறவுகள் பாதிக்கப்பட்டிருந்தன.

## கனடாவில் களவு தொடர்கிறது

கனடாவில் உள்ள பெரிய வியாபார நிறுவனங்களிலும், சுப்பர்மார்க்கெட்டுகளிலும் வாடிக்கையாளர்கள் விற்பனைப் பொருள்களை திருடுவது அதிகரித்துள்ளதாம்.

பொருள்களை வாங்க வருவோர் பணம் கொடுத்து வாங்கிய பொருள்களுக்கு மேலாக அங்குள்ள பொருள்களைக் கையாடல் செய்கிறார்களாம்.

நாளாந்தம் ஒரு மில்லியன் டொலர்கள் பெறுமதியான பொருள்கள் இப்படி அங்கு களவு போவதாகச் சொல்லப்படுகிறது

இப்படியான களவுகளைத் தடுப்பதற்கு அக் கடைகளில் கம்பியூட்டர்கள் பொருத்தப் பட்டிருந்தாலும் களவுகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறதாம்.

## தென் ஆபிரிக்காவும் தயாராகிறது

தென் ஆபிரிக்காவில் இன வேறுபாடு அற்ற ஐக்கிய கிரிக்கெட் சபை அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.இந்த அங்குரார்பண விழாவுக்கு இந்திய முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் சுனில் கவாஸ்கர் சிறப்பு விருந்தினராகக் அழைக்கப்பட்டுள்ளார்.

தென் ஆபிரிக்க இன வேறுபாட்டுக் கொள்கையை ஒதுக்கிய பின் முதல் டெஸ்ட் போட்டி இந்திய அணியுடனே இருக்கும் எனவும் அறிவிக்கப்படுகிறது. (74)

## போட்டிப் பரீட்சை மூலமே இனி புதிய அதிபர் நியமனங்கள்!

பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்கள் அனைத்தும் நிரப்பப்படல் வேண்டுமெனக்கல்வி அமைச்சு கல்விப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளது.

இந்தப் பாடசாலைகளுக்கு அதிபர்கள் போட்டிப் பரீட்சையின் அடிப்படையிலும் சேவை மூப்பு, திறமை என்பவற்றின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர்.

போட்டிப் பரீட்சைக்கு 60 சதவீத புள்ளிகளும், சேவை மூப்புத் திறமை என்பவற்றுக்கு 40 சதவீத புள்ளிகளும் வழங்கப்படல் வேண்டுமெனக் கல்வி அமைச்சுப் பணித்துள்ளது.

## டொனால்ட் போட்டித் தொடரில் நொதேணை எதிர்த்து ஜொனியன்ஸ்

யாழ் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர் டொனால்ட் கணேஸ்குமார் ஞாபகார்த்த சுற்றுக் கிண்ண கிரிக்கெட் போட்டி யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது. யாழ் மத்திய கல்லூரி, அதிபர் நா. க. சண்முகநாதபிள்ளை சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகக் கொடியை ஏற்றி விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

யாழ் மாவட்டத்தில் பிரபல்யம் பெற்ற 13 கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்கள் இப்போட்டியில் கலந்து கொள்கின்றன.

சனிக்கிழமை நடைபெற்ற முதல் போட்டியில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் யாழ் சென்றலைட்ஸ் (நீல) அணியை வெற்றியீட்டியது. ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் யாழ் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணியினர் யாழ் பற்றீசியன்ஸ் அணியைதோற்கடித்தனர்.

நாளை புதன்கிழமை மு.ப 9 மணிக்கு நடைபெற உள்ள போட்டியில் யாழ் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து யாழ் நொதேண் அணியினர் மோத உள்ளனர். (16,78)

## யாழ் அணி வெற்றி பெற்றது.

வீரவேங்கை றஞ்சன் சித்தப்பா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காகபருத்தித்துறை மாவட்டலீக்கினால் நடாதத்ப்பட்டஉதைபந்தாட்டப் போட்டியைத் தொடர்ந்து ஒழுங்கு செய்யப்பட்ட சிநேகபூர்வ கண்காட்சி உதைபந் தாட்டப் போட்டியில், யாழ் மாவட்டம் தெரிவுஅணி வெற்றிபெற்றது.

## மாநகர சுகாதாரப்பகுதிக்கு யுனிசெப் வாகன உதவி

யாழ் மாநகரசபை சுகாதாரப்பகுதியினர் தமது சுகாதார நடவடிக்கைகளை விரிவாக மேற்கொள்வதற்காக யுனிசெப் நிறுவனம் வாகனம் வழங்கவுள்ளதாக மாநகர சுகாதாரப்பகுதி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெகுவிரைவில் இவ் வாகனங்கள் இங்கு அனுப்பிவைக்கப்படும் என அந் நிறுவனத்தினர் உறுதி கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(74)

# இருபாலை ஆனந்தபுரத்தில் தொழுநோய் ஆய்வு

இருபாலை ஆனந்தபுரத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி தொழுநோய் சம்பந்தமான ஆய்வு ஒன்றைக் கோப்பாய் சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் கே. எஸ். குமாரசாமி கோப்பாய் சுகாதாரப் பரிசோதகர் கே.வருணநாதன் ஆகியோர் இதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர்.

தொழுநோய் சம்பந்தமான ஆய்வுகளை தொழுநோய்சுகாதாரப் பரிசோதகர் கே. குணரட்னம் மேற்கொள்வார் 33

## யாழ் நகர வீதிகளில்

# பன்றிகளின் தொல்லை தினமும் அதிகரிப்பு

யாழ் ஆஸ்பத்திரி வீதி, பருத்தித்துறை வீதி என்பனவற்றில் உள்ள கழிவு நீர் வாய்க்காலில் மேயும் பன்றிகளால் பாதசாரிகளுக்கு தினமும் அசௌகரியங்கள் ஏற்பட்டு வருகின்றன.

பன்றிகள் சேறும் சகதியுமாக வீதிக்கு வருவதால் துர்நாற்றம் வீசுகிறது.

இவை யாழ் ஆஸ்பத்திரி வளவிற்குள் உள்ள கழிவுப் பொருள்களை கிளறுவதால் நோயாளிகளும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பன்றிகள் தொடர்பாகஅவற்றைவளர்ப்போருக்கு சில அறிவுறுத்தல்களை விடுத்திருந்தும், தொடர்ந்தும் இப்பன்றிகளால் தொல்லைகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 79

# மீள் நியமன ஆசிரியருக்கு சம்பளம் கிடைக்கவில்லை

யாழ் மாவட்டத்திலுள்ள கோட்டக்கல்வி அலுவலகப் பிரிவுகள் தோறும் ஒய்வு பெற்றபின் மீள் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் பலருக்கு இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் சம்பளம் வழங்கப்படவில்லையெனப் புகார் செய்யப்படுகிறது

விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் முதலான பாடங்களுக்கு ஆசிரிய தட்டுப்பாடு ஏற்பட்டதை அடுத்தே இந்த மீள் நியமனம் ஓய்வு பெற்ற ஆசிரியர்களிடையே தெரிந்தெடுத்து வழங்கப்பட்டிருந்தது.

'இந்த ஆசிரியர்கள் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்கள். 12

## தகவல் தரவும்



படத்தில் இருப்பவர் 'புளொட் சிறி' என்று அழைக்கப்படுபவர் சில தினங்களுக்கு முன்னர் இவர் தப்பியோடியிருந்ததாகச் செய்தி வெளியானது தெரிந்ததே.

இவர்பற்றியதகவல் தெரிந்தவர்கள் அருகிலுள்ள விடுதலைப்புலிகள் பிரதேசக்காரியாலயத்தின் ஊடாக கோண்டாவில் தலைமைச் செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு விடுதலைப்புலிகள் வேண்டியுள்ளனர்.

## கொலை...

மத்தியில் எவ்வாறு தமிழகத்தை விட்டு வெளியேறினார்கள் என்பது ஆச்சரியமாக உள்ளது எனவும் சி. பி. ஐ. கூறியுள்ளது.

முன்னதாக இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாகத் தமிழகத்தில் சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு மக்களைக் குழப்புவதாக சி. பி. ஐ. குற்றஞ்சாட்டியிருந்தது.

இவர்களைக் கைது செய்ய தமிழகத்தில் ஓர் அதிரடிப் படைஇயங்குவதுதெரிந்ததே.

## பத்து...

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு சுய தொழிலை மேற்கொள்ள நிதி உதவி வழங்கவும் இக்குழு தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு கிராமத்தில் இருந்தும் மூன்று பேர் வீதம் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

தெரிவு செய்யப்படுபவர்கள் 45 வயதுக்குட்பட்டவராகவும் கணவனை இழந்தவராகவும் உணவு முத்திரை உள்ளவராகவும் நிரந்தர வருமானம் எதுவும் இல்லாதவராகவும் இருத்தல் வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது. (12)

வெளிவந்துவிட்டது

வரலாறும், சமூகக்கல்வியும்

ஆண்டு - 10

துரித மீட்டலுக்கான வினாவிடை

ஆக்கம்; க. சந்திரசேகரம்

ஆண்டு 11 மாணவர்களுக்கும் பயன்படக்கூடியது

06076

# நெல்லியடி ம. ம. வித்தியாலயத்தில் தனியாக மகளிர் கல்லூரி ஆரம்பம்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மகளிர் பிரிவைத் தனியான மகளிர் கல்லூரியாக இயங்குவதற்கு மாகாண கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதனையடுத்து இக்கல்லூரி "வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி" என்ற பெயருடன் இயங்கத் தொடங்கவுள்ளது.

இக் கல்லூரியின் தற்காலிக அதிபராக திருமதி சுந்தரலிங்கமே நியமிக்கப்பட்டுள்ளார்.

மகளிர் கல்லூரியாக தனியாக இயங்கச் செய்வதற்காக நடவடிக்கைகளை கல்வித் திணைக்களம் வெகு துரிதமாக மேற்கொண்டுவருகின்றது.

கரவெட்டிப் பகுதியில் தனியான பெண்கள் கல்லூரி ஒன்று இல்லாதது பெருங் குறைபாடெனவும், எனவே நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மகளிர் பிரிவைத் தனியானமகளிர் கல்லூரியாக மாற்றுமாறும் இப்பகுதி மக்கள் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது. 15

## சுசரோகம், புற்றுநோய், தொழுநோய்

# 1991 பங்குனி, சித்திரை கொடுப்பனவுக்கு அனுமதி

1991 பங்குனி, சித்திரை மாதங்களுக்குரிய சுசரோக புற்றுநோய், தொழு நோய்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இக்கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வோர் தத்தம் பகுதி உதவி அரச அதிபர் பணிமனைகளில் பெற்றுக் கொள்ளலாம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

யாழ் உதவி அரச அதிபர் பிரிவிலே இந்தக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வோர் செயலக சமூக சேவைப் பகுதியில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று சமூக சேவைப் பகுதியின் உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்

இவ்வார இறுதிக்குள் இந்த உதவிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளும்படி அறிவிக்கப் பட்டுள்ளது. (47)

## சரத்...

ராவ் உள்விவகார அமைச்சரரக எஸ். பி. சவானை நியமித்தார்.

இது சரத்பவார்ரை ஒடுக்க பிரதமரின் திட்டமிட்ட வேலையாக இருக்கலாம் என செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## கூடும்...

லலிதா 16 வயதில் "வெண்ணிறஆடை" என்ற தமிழ்த் திரைப்படத்தின் மூலம் திரையுலகில் அறிமுகமாகிப் பின்னர் எம் ஜி ஆரால் அ. தி. மு க. கொள்கை பரப்புச் செயலாளராக அரசியலில் நுழைந்தார்.

## பல்கலைக்கழக...

தைத் கண்டித்துமே இவ் ஆர்பாட்ட ஊர்வலம் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 10 மணிக்கு பல்கலைக் கழகத்திலிருந்து ஆரம்பமாகி இராமநாதன் வீதி. கே. கே. எஸ்: வீதி. ஆஸ்பத்திரி வீதி யூடாக செஞ்சிலுவைச் சங்கம் நோக்கி சென்றது. அங்குள்ள பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்க பட்டது.

அதைத் தொடர்ந்து ஊர்வலம் செயலகம் சென்று அங்கும் மகஜர் கையளிக்கப் பட்டது.

ஊர்வலம் மீண்டும் கச்சேரி நல்லூர் வீதி, பருத்தித்துறை வீதி, அரசடி வீதி, பலாலி வீதி ஊடாக பல்கலைக்கழகத்தை வந்தடைந்ததும் பொதுக் கூட்டம் இடம்பெற்றது.

சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் செயலினைக் கண்டித்து சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கோசமெழுப்பிச் சென்றனர்.

70,74, ப-12, 33

## தமிழக...

இன்றைய தமிழக நிலைமையில் எதிர்த்தரப்பினர் ஆட்சிக்கு வந்திருந்தால் நிலைமை இன்னமும் மோசமாகியிருக்கும் என்றார் முதலமைச்சர் ஜெயலலிதா.

## வடபகுதி..

தில் இருந்து கல்வித்திணைக்களத்தின் மூலம் செலுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால் ஒய்வுபெற்ற பின்னர் தாம் செலுத்திய பணத்தை பெறுவதற்கு உரியமுறைப்படி விண்ணப்பித்திருந்தனர்.

ஆனால் சங்கத்திலிருந்து எவ்வித பதில்களும் வருவதில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் உள்ள இச் சங்க அலுவலகத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்வர்கள் பணிபுரிவதால் தமிழில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படாத நிலையில் உள்ளதாவும் தெரிவிக்கப்படுகிறது (33)

## மண்டதீவில்...

ளது.

நீலநிற உள்ளங்கி அணிந்து காணப்பட்ட இச்சடலம் இனங்காண முடியாதளவிற்கு அழுகிய நிலையில் காணப்பட்டது. (ப-12)

## தீகில்...

இவ் அலுவலகங்கள் விரைவில் புறநகர்ப் பகுதிகளுக்கு அகற்றப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இத்தகைய அலுவலகங்களைச் சுற்றியுள்ள வீதிகள் தடைசெய்யப்பட்டு பலத்த காவல் போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## வல்வெட்டித்துறை .

நேற்று அதிகாலை 3.45 மணிவரை இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

கடற்படையினரின் ஷெல்களில் பல கடலில் வீழ்ந்தன. சில முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு அருகிலும், மதவடிப்பகுதி, மானாங்காளை, பொலிகண்டி, சக்கோட்டை போன்றபகுதிகளிலும்விழுந்து வெடித்தன.

பலாலியிலிருந்து வந்த ஷெல்கள் கரணவாய், வல்லைப்பகுதிகளில் விழுந்து வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (3[illegible])

## 90-ம் நாள் நினைவஞ்சலி



### வேலாயுதம் ஜெயகாந்தன்

மலர்வு: 23 - 08 - 71 உதிர்வு: 28 - 03 - 91

எங்கள் அன்புச் செல்வமே - கண்ணா
உன் நினைவு என்றும் எங்களை விட்டகலாது

உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

பன்னாலை, தெல்லிப்பழை.

அப்பா, அம்மா, அக்கா, தம்பியும் உறவினரும்.

06088

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ், (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி 'லக்ஷ்மி' பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 25.6.1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.